உ

சிவமயம்.

மதுரைமாநகரத்தில் எழுந்தருளிய

மீனாட்சியம்மன் பேரில்

# அம்பிகைமாலை

இது

சிதம்பரம்

## குருநாதசுவாமிகளால்

பார்வையிடப்பட்டு.

நுங்கம்பாக்கம்.

## அருணகிரிமுதலியார்

அவர்களது.

அம்பாள்விலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப் பட்டது.

௧௮௬௬ ௵.

மதுரைமீனாட்சியம்மன்பேரில்

# அம்பிகைமாலை

காப்பு-கட்டளைக்கலித்துறை.

நடக்குந்திருவிளையாட்டோ ரறுபத்து நாலுஞ்சொக்
க, னடக்குந்தென்கூடலி லம்பிகைமாலையை யாறினுக்
குத், தடக்குமபகம்பச் சிறுகட்புகர் முகந்தால வட்ட,
முடக்குந் தடக்கை பொருகோட்டு வாரணமுன்னிற்க
வே.

திருவே விளைந்த செந்தேனே வடியிட்ட தெள்ளமு
தி, னுருவேமடப்பிள்ளை யோதிமமேயொற்றையாடவ
ட்பூர்; தருவேநின் றாமரைத் தாளேசரணஞ் சரணங்க
ண்டா, யருவேயணங்கரசே மதுராபுரியம்பிகையே. க

நாட்கொண்ட கொங்கைத் துணையும் பொன்னோலை
யுநஞ்சிழைத்த, வாட்கொண்ட நாட்டமுந்தொண்டை
ச்செவ்வாயு மருங்குடுத்த, தோட்கொண்ட செம்பட்டு
முத்தார முங்கொண்டு தோன்றியென்னை யாட்கொண்
டநாயகியே மதுராபுரியம்பிகையே. உ

கரும்புங்கணை யைந்தும் பாசாங்குசமுங்கைக்கொண்
டடியேன், றிரும்புந்திசை தொறுந்தோற்று கண்டாயி
சைதேக்குமணிச்; சுரும்புண்டகாவியுஞ் சோதிநிலாவி

ன் றுளிநஞ்சத்தே- யரும்புங்கனங்குழலாய் மதுராபுரி
யம்பிகையே. ௩

வடக்குன்றமேருவு மூதண்டமட்டும் வளைந்துபுறங்
கிடைக்குங்கடலும் புவனங்களேழுங் கிளர்மருப்புத்,த
டக்குஞ்சரமெட்டு மெல்லாந்திருவுந்தித்தாமரையி,லட
க்கும்பரா சத்தியே மதுராபுரியம்பிகையே. ௪

நோக்குங்கருணைவிழி யாற்பொதுவற நோக்கியென்
னைக், காக்கும் படிக்கு கருதுகண்டா யொளிகக்குநிலா,
வீக்குஞ்சடாடவி யானுண்டகாள விடத்தையமு, தாக்
குஞ்சிவானந்தியே மதுராபுரியம்பிகையே ௫

ஒளிகொண்ட வெம்பிறைத் தோடுவபொன் மேனியு
மூறியதேன், றுளிகொண்ட செங்கனிவாயு முத்தாரமுந்
தோளுமென்றன், களிகொண்டநெஞ்சங்குடிகொண்ட
வாவிசைசக்கும்வரி, ரளிகொண்ட பூங்குழலாய் மதுரா
புரி யம்பிகையே ௬

பொடிபட்ட மிட்டுக்குத் தோள்கொண்ட கூடம
ண்போட்டுப்பொங்கி, வெடிபட்டலையை யடைத்தவ
ர்நாள் சொக்கர்மேனி சுற்றங், கொடிபட்டபோது மு
ழுநீலக்கோமள மேனியினு, மடிபட்டதோவணங்கே ம
மதுராபுரி யமபிகையே, ௭

விளையுங்கருக்குழி வீழாம லென்றன்வினைப்பிறவி,
களையும்படிப்பதங் காட்டுவையோகழுநீரைவென்று; வ

ளையுந்தரள மணித்தோடழுத்திய வள்ளையைச்சென் ற
லையுங்கயல்விழிய ய மதுராபுரியம்பிகையே. ௮

போர்க்குங்கலாமம்புங் சொன்றை மாலையும் பொன்
முடிமேற், சேர்க்குந்தலைவன்முன் செல்லுமப்போதிர
ண்டமுத்தின், வார்க்குங்குமக் கொங்கையானைக்கதிர்ம
ணிமா முரச, மார்க்குமபரி புரத்தாய் மதுராபுரி யம்பி
கையே.

ஒழியாப்பனித் தடங்கண்ணீர் ததும்பவந் துன்ன
டிக்கே, யொழியாய் புதுமலரிட்டு நிற்பார்க்குப் பொழி
கருணை, விழியாற்சுரப்ப வலர்ந்தசெந்தாமரைவீடு மெ
ன்று, மழியாப்பதந் தருவாய்மதுராபுரியம்பிகையே.

நாரணங்கொஞ்சும்புகழ் நான்முகற்கும் பொன்னாட்
டவர்க்கும், காரணங்கொஞ்சு முன்சிற்றடியேன்றிசை
கட்டுமெட்டு, வாரணங் கொஞ்சுங்கடம்பாடவியன்மகி
ழ்நனுட, ஞாரணங்கே கொஞ்சுமம்மே மதுராபுரியம் பி
கையே, ௰௧

ஊடும்பொழுதுங் கருணைவிடாம லுரைப்பவர் தோ
ட், கூடுந்தொழிலை மறப்ப தொன்றோ நறைக் கொன்
றையுந்தார், சூடுந்தலைவன் றிருமார் பில்வாரி சொரித
ரள, மாடுந்துணைமுலையாய் மதுராபுரியம்பிகையே.

கொடிகொண்ட சிற்றிடையார் மணிநூபுரங் கொஞ்
சுடிப், பொடிகொண்ட சென்னியிற்கால்வைத்துமேபு

ற்றரவெடுத்து, முடிகொண்ட சொக்கனழியாவிரத மு
டிக்கவென்றே, யடிகொண்டபூண்முலையாய் மதுராபுரி
யம்பிகையே. ௰௩

பொருந்துங் கழல்விழி மாதர்களாசைப்புணரியல்யா
ன், வருந்துந்துய ரென்றொழிப்பை கொல்லோ மணப்
பந்தரிலே, இருந்துங்கரம பற்றிநிற்பான் திருமுகச்செ
வ்வியெல்லா, மருந்துந் துணைவிழியாய் மதுராபுரி யம்
பிகையே,

பொன்னே நவமணியே யமுதேபுவி பூத்தடங்கா,மி
ன்னேயளிவைத்த மெய்ப்பொருளே கப்புவேலை யென்
மே, லென்னேரங்காலன் விடுத்தாலு நீயிருகை யமர்த்தி
யன்னேரம் வந்தளிப்பாய் மதுராபுரியம்பிகையே ௰௫

நுங்கேள்வர் பாகத்து மங்காத நான்மறை நூலிடத்
துங், கொங்கேய் பொருட்டுக் கமலாலயத்துங் குடிகொ
ண்டமற், றெங்கே யிருக்கினுநாயடி யேனுக்கிடர் வரு
ம்போ, தங்கேவெளிப் படுவாய் மதுராபுரியம்பிகையே.

இணங்கே னொருவரை நின்னிருதாளன்றியெப்பொ
ழுதும், வணங்கே னொருவரை வாழ்த்துகிலேனெஞ்சில்
வஞ்சகர்பாற், பிணங்கே னமிர்தம் பெருகுஞ்சிறிய பி
றைமுடித்த, வணங்கேசரணங் கண்டாய்மதுராபுரியம்
பிகையே, ௰௭

குன்றேயெனு முலையார் தருங்காதற் கொடுமை யெ
லாம்,"வென்றேன் வெகுளியை விட்டுவிட்டேன்விரை

த்தாமரைத்தா, ளின்றேயென் சென்னிவைத் தாயினி
யான் செயுமேவலெல்லா, மன்றேயுன்னேவல் கண்டா
ய் மதுராபுரி யம்பிகையே ௰௮

வடிவைத்த வேல்விழியா ரநுராகமயக்கிச்சென் றுகு
டிவைத்த நெஞ்சென்று மீளுங் கொலோவன்புகொண்
டதொண்டர், முடிவைத்த வாறென் முடைத்தலை மே
ற்றுப்ப முகற்றின் றண்டை, யடிவைத்தகோமளமேம
துராபுரி யம்பிகையே ௰௯

நெளிக்கும்புழு மொய்த்து மேயுங்குரம்பையி னின்
றுழுயி, ரொளிக்கும்பொழுது வெளிப்படுவாயண்டமு
ண்டவண்ண, றளிக்குங் கருணையிற் குல்சொண் டுலா
வித்தொடர்ந்தபடர்ந், தளிக்குப்பசுங்கொண்டலே ம
துராபுரியம்பிகையே. ௨௰

உலைதுதிக்குந்தழ லூரியசானலை யுண்ணச்சென்று,க
லைதுதிக்கும்படி போலுழன்றேன் கழிச்செல் வெருண்
டு, வலைதுதிக்குஞ் செங்கழுநீ ருடைநதுவழித்தசெந்தே
னலைதுதிக்குந் தடஞ்சூழ் மதுராபுரியம்பிகையே ௨௧

ஏலமடங்குங் குழலார் குற்றேவலி லெய்த்தடிபேன்
காலமடங்கு முன்வந்துநிற்பாய்விண் கடந்துநின்ற,கோ
லமடங்குமறியாதபச்சைக் குழவிடைப்போ, லாலமட
ங்குமம்மே மதுராபுரியம்பிகையே. ௨௨

கொஞ்சுங்கிளி மொழியார்க் கன்புபூண்டு குலையுமெ
ன்ற, னெஞ்சம் பொறம்பாத நினைப்பதுண்டோ வெண்

ணிலாமதியின், பிஞ்சுங்கழைவில்லுமங்குசபாசமும்பிச்
சிமல, ரஞ்சுந்தரித்தவளே மதுராபுரியம்பிகையே. ௨௫

செழுந்துங்கக் கொங்கையு முத்தாரமும்பொற்சிலம்
புத்திங்கட், கொழுந்து மகரக்குழையு மெல்லாய்வண்டு
கோடிசுற்றி, யுழூர்துப்பை சூடுந்திருமேனியு முன்னு
டலுமொன்று, யழுந்தும்பொழுதுமுண்டோ மதுராபு
ரியம்பிகையே, ௨௬

பூண்டகைவாரிப் புதுமலர் தூவினின் பொன்னடிக்
கே, கூண்டகை சென்னிகுவிக்கப் பெற்றேன் பிறைக்
கோடணிந்த, நீண்டகைவேழப் பிடரேறிவட்ட நிலம்
பிறக்கு,மாண்டகையேயணங்கே மதுராபுரியம்பிகையே

கணையுங்குமிழு மிணைநெடுஞ்சாப முநுகரும் வளைநோ
த், துணையும டவளமுஞ் செவ்விதழ்நிருந் துவண்டப
ச்சைசப், பணையம் பணிதடங் காந்தளும்பார்த்தனுப்ப
த்துமொன்று,பணையுந்திருவுருவே மதுராபுரியம்பிகை

இணைக்குடம மென்முலையார் விழிவேலுக்கு மெய்யு
மதன், கணைக்குந்தனி யிலக்காய்விட லோமணிக்கச்சக
லாத், துணைக்குடம்ப மென்முலையார் சொக்கன்மேனி து
வளக்கட்டி, யணைக்குஞ் சதானந்தியே மதுராபுரி யம்
பிகையே ௨௭௪

மழைக்குந் தளமடவார் தருங்காதல் வலைத்தலைப் ப
பிட், டிழைக்குஞ் சழக்கனைக் காப்பதுண்டோ விரண்டு

ன்மணிக், குழைக்குங் கரந்தசுரும்பை யெல்லாங்குழை
யூடேடங், தழைக்குங்கயல் விழியாய் மதுரா புரியம்பி
கையே,

முலைக்கேபவசத் தொழில்விளைப் பாரின்பமோகமெ
னும், வலைக்கேயகப் பட்டருந்தி விடாமல்வலியவந்தே
ன், றலைக்கேபதம் வைத்ததண்ணளியே முத்தந் தத்து
திரை, யலைக்கேவிழி துயில்வாய் மதுராபுரியம்பிகையே

மணியுந்தவளமும் வண்ணகை யோவழிமூவர் செய்
யத், துணியுந்தொழிலுமுன்செய்தொழிலோபதித்துத்
துத்திமுடிப், பணியஞ்சுருளுஞ் கடலேழுகின்சரப்பங்
கயத்தி, லணியுஞ்சிறுவளையோ மதுராபுரியம்பிகையே

அம்பிகைமாலை-முற்றிற்று

——()——

## சிறப்புப்பாயிரம்

பிடித்தாரக் கட்டியணைத்த மூதாட்டியபேயினுயி
ர், குடித்தாடுமாயன் குலசேகரன்வட குன்றைச்செண்
டா, லடித்தானியற்றிய வம்பிகைமாலையை யாறுகவி,ப
டித்தார்கள் கற்பகக் காவும்பொன்னாடும்படைப்பவரே

சிறப்புப் பாயிரம்.

முற்றிற்று.